7th April 1958]

SRI N. K. PALANISAMI : 1956-ம் வருஷத்தில் அக்டோபர் மாதத்தில் சர்க்காருக்கு அந்த இலாகாவிலிருந்து சிபாரிசு வந்திருக்கிறதா? அதாவது விவசாயத்திற்கான மின்சாரக் கட்டணத்தை இப்பொழுது இருப்பதிலிருந்து $6\frac{1}{4}$ சத விகிதம் குறைக்க வேண்டும் என்ற சிபார்சு வந்திருக்கிறதா ? அப்படியானால், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : அதுபோன்ற சிபார்சு அரசாங்கத்திற்கு வரவில்லை.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : So far as the supply of electrical energy to agriculturists is concerned, I find some disparity between areas and areas. I find that in certain areas they are collecting at the rate of Rs. 35 as u.c.m. whereas in certain areas they are collecting at Rs. 50 as u.c.m. May I request th Hon. Minister to tell the reason for this disparity?

THE HON. SRI V. RAMAIAH : In the collection of minimum charges there is no disparity at all. From every scheme a return of ten per cent is expected. In the calculation of this ten per cent the amount may vary from scheme to scheme.

SRI N. K. PALANISAMI : சர்க்காருக்கு இப்பொழுது வரக்கூடிய வருமானம் குறையாமலேயே விவசாயிகளுக்கு கொடுக்கும் மின்சாரத்திற்கான இந்தக் கட்டணத்தைக் குறைக்க சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : இதற்குத் தனி கேள்வி வேண்டும்.

D.M.K.

* 589 *Q*.—SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Home be pleased to state the class in which M.Ps. and M.L.As. belonging to Dravida Munnetra Kazhagam who were arrested under the Preventive Detention Act were placed in Jail? 9 a.m.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No M.L.A. or M.P. belonging to the Dravida Munnetra Kazhagam was arrested under the Preventive Detention Act. Therefore the question does not arise.

SRI A. GOVINDASAMY : திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எந்தச் சட்டத்தின் கீழ் கைதி செய்யப்பட்டார்கள் என்று சொல்லமுடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் 151–வது பிரிவுப்படி கைதி செய்யப்பட்டார்கள்.

SRI S. LAZAR : குற்றம் செய்யக்கூடிய குற்றவாளிகளை திராவிட முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்கூட சாதாரண கைதிகளை மூன்றுவது வகுப்பில் வைக்கும்போது அந்தக் கட்சியைச் சேர்ந்த எம்.பி., எம்.எல்.ஏ. முதலியவர்களும், தலைவர்களும் தங்களுக்கு ஏதாவது ஸ்பெஷல் க்ளாஸ் வேண்டுமென்று கோரிக்கையை அனுப்பியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்தமாதிரி திராவிட முன்னேற்றக் கட்சியைப் பொறுத்தமட்டில் யாரும் தண்டிக்கப்பட்டு சிறையில் இருக்கிறார்கள் என்று நினைக்கவில்லை. ஆகவே இந்தப் பிரச்னை எழவேயில்லை.

[7th April 1958

Sri K. ANBAZHAGAN : திராவிட முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ., எம்.பி. முதலியவர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவில்லை என்றாலும் சாதாரண கைதிகளைப்போலக் கூட நடத்தப்படக்கூடாது, தண்ணீர்கூடக் கொடுக்கப்படக்கூடாது என்பதாக ஏதாவது உத்தரவு போடப்பட்டுள்ளதா ? சட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அண்டர் ட்ரையல் கைதிகளுக்கும், தண்டிக்கப்பட்ட கைதிகளுக்கும் எந்த எந்த விதிப்படி தண்டனை அளிக்கப்படவேண்டும், அந்தஸ்துக்கு ஏற்றபடி எந்த எந்த வகுப்புகளில் வைக்கவேண்டும் என்பதற்கு விதி இருக்கிறது. ஆனால் க்ரிமினல் ப்ரொசீஜர் கோட் 151-வது பிரிவுப்படி கைது செய்யப்பட்டவர்களுக்கு அப்படிப்பட்ட விதி ஒன்றும் இல்லை. சாதாரண கைதிகளைவிடக் கேவலமான முறையில் நடத்தப்பட்டார்கள் என்பதை நான் ஒத்துக்கொள்ளவில்லை. அதை ஒப்புக்கொள்ளவும் முடியாது.

Sri A. V. P. ASAITHAMBI : திராவிட முன்னேற்றக் கழக எம்.எல்.ஏ., எம்.பி., முதலியவர்களுக்கு எந்தவிதமான வசதியும் கொடுக்கப்படவில்லை. ஆனால் இப்பொழுது கைதி செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ முத்துராமலிங்க தேவருக்கு முதல் வகுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேமாதிரி இவர்களுக்கு ஏன் கொடுக்கவில்லை என்று சொல்வார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதி செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன என்ன வசதி கொடுக்கப்படவேண்டுமென்பதற்கு தனி விதி இருக்கிறது. க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் 151-வது செக்ஷன்படி கைது செய்யப்பட்டவர்களுக்கு அந்த விதி இல்லை.

Sri K. ANBAZHAGAN : செக்ஷன் 151-வது பிரிவுப்படி கைதி செய்யப்பட்டவர்கள் துண்டுகூடப் போட்டுக்கொள்ளக்கூடாது, குடிக்கத் தண்ணீர் கேட்டால்கூடக் கொடுக்கக்கூடாது என்பதாகச் சட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அப்படி ஒன்றும் உத்தரவு கிடையாது. உத்தரவு போடவில்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

Woodbriar Estate, Nilgiris

* 590 *Q.*—**Sri N. MARUDACHALAM :** Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether Government have received any report that the Labour Union has given a strike notice as the management of Woodbriar Estate at Nilgiris has thrown out more than hundred labourers and doing the work on contract in contravention of the statutory agreement it made with the Labour Union before the Labour Officer; and

(*b*) if so, the action taken thereon by Government?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The dispute has been referred to the Industrial Tribunal, Madras, for adjudication.

Sri N. MARUDACHALAM : நீலகிரி எஸ்டேட் மானேஜ்மெண்டார் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களைத் தள்ளிவிட்டு கண்டிராக்ட் முறையில் வேலை நடத்திவருகிறார்கள். அந்தக் கண்டிராக்ட் முறையை அனுமதிக்காது,